உ

சிவமயம்



# நயினாதீவு
# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## அறங்காவலர் சபை

## 2011ம் வருடத்திற்கான
(01-01-2011 - 31-12-2011)

# கணக்காய்வு அறிக்கை

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## ஆண்டறிக்கை - 2011

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் 2011ஆம் ஆண்டுக்கான அறிக்கையை அறங்காவலர் சபையின் சார்பில் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வறிக்கை தற்போதைய அறங்காவலர் சபையின் முதலாவது அறிக்கை என்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2011ஆம் ஆண்டுக்குரிய அறங்காவலர் சபைக்கான தெரிவு 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி வேலணை பிரதேச செயலரின் தலைமையில், கோவிலின் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. மரபுவழி அறங்காவர்களான திரு.ஆ.தியாகராசா, திரு.கு.சரவணபவானந்தன், கலாநிதி க.நாகேஸ்வரன் ஆகியோரை உள்ளடக்கிய பன்னிரு அறங்காவலர்கள் கோவிலின் யாப்பு விதிகளுக்கமைய தெரிவு செய்யப்பட்டனர். கீழ்க்குறிப்பிடப்படும் ஒன்பது புதிய அறங்காவலர்களும் மூன்று ஆண்டுகள் பதவி வகிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

1. திரு.ந.மோகனரூபன்
2. திரு. சோ.வாமதாசன்
3. திருமதி. த.வசந்தாதேவி
4. திரு.ப.க. பரமலிங்கம்
5. திரு.வீ.தங்கராசா
6. திரு.அ.சர்வானந்தராசா
7. திரு.த.அமிர்தராசா
8. திரு.கா.பொ.இ.குலசிங்கம்
9. திரு.க. மாணிக்கவாசகர்

மேற்கூறப்பட்ட பன்னிரு அறங்காவலர்களும் 2012/02/26 திகதியன்றே ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற் கூடி திரு.ஆ.தியாகராசா அவர் களைத் தலைவராகவும், திரு. ந. மோகனரூபன் அவர்களைச் செயலாளராகவும் திரு.கோ.வாமதாசன் அவர்கள் பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்து ஓராண்டு காலப் பகுதிக்கு பதவி வகிப்பதற்கு வழி செய்யப்பட்டது.

**மகாசபை – உறுப்புரிமை விபரம் – 2011**

2011ஆம் ஆண்டுக்கான மகாசபை உறுப்புரிமை விண்ணப்பங்கள் 385 கிடைத்தன. இவ்விண்ணப்பங்கள் 2011/04/23 ஆம் திகதி நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் அங்கத்தவர்களுடைய கவனத்துக்குப் பரிசீலனைக்கு மாகச் சமர்ப்பிக்கப்பட்டு 359 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 26 விண்ணபங்கள் முறைப்படி அமையாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டன.

புதிய அறங்காவலர் சபை, யாப்பு விதிகளுக்கமைய மாதந்தோறும் சபைக் கூட்டங்களை நடாத்தி ஆலயத்தின் திருப்பணிகள், மகாகும்பாபிஷேக ஏற்பாடுகள், வருடாந்த மஹோற்சவம் என்பன தொடர்பில் கலந்துரையாடல் களை நடாத்தியதுடன் கடந்த ஓராண்டு காலத்தில் 12 முறைகூடி முக்கியமான தீர்மானங்களை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தியும் உள்ளது.

## திருப்பணிகள்

### இராஜகோபுரம்

புதிய அறங்காவலர் சபை தனது பொறுப்புக்களைக் கையேற்றபோது ஆலய கிழக்கு வாசலின் 108 அடி உயர இராஜகோபுர அண்ணளவாக 60% பூர்த்தியடைந்த நிலையில் இருந்தது. இஃது பெரிய அளவிலான திருப்பணி என்பது யாவரும் அறிந்ததே. இப்பாரிய திருப்பணியையும் கீழக்காணும் ஏனைய திருப்பணிகளையும் கடந்த ஓராண்டு காலத்துள் எம்மால் நிறைவேற்ற முடிந்தமை எம்பிராட்டியின் திருவருளேயாகும்.

### தெற்கு வீதி நுழைவாயிற் கோபுரம்

கோவிலின் தெற்கு வீதி நுழைவாசலில் இரண்டடுக்கு கோபுரம் அமைந்தால் கோவிலுக்குச் சிறப்புச் சேர்க்குமென்றும் கிராம மக்களை அம்பாளின் தெற்கு நேர்ப் பார்வை ஆட்சிப்படுத்துமென்றும் கருதி இக்கோபுரத் திருப்பணி 90% முடிவுறுத்தப்பட்டு - 2012 இல் கும்பாபிஷேகத்துடன் நிறைவுறுத்தப்பட்டது.

### திருக்கேணி

கோவிலின் திருக்கேணி கலையம்சமும் தெய்வீக அம்சமும் கலந்ததாக அமைந்தால் கோவிலுக்குச் சிறப்பும் அழகும் சேர்ப்பதாக இருக்கும் என்பதை அறங்காவலர் சபை கருதி - திருக்கேணியை பார்ப்போர் பரவசமடையும் வகையில் அழகுற அமைத்து 2012இல் மகா கும்பாபிஷேகத்தின் போது அர்ப்பணித்தது.

### ஸ்ரீ புவனேஸ்வரி கலை அரங்கு

ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைந்திருந்த கலையரங்கு, எமது கலை, பண்பாடு என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் சீர் செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு கலையம்சங்கள் மிளிரும் வண்ணம் இவ்வரங்கு அழகுபடுத்தப்பட்டு "ஸ்ரீ புவனேஸ்வரி கலையரங்கு" எனப் பெயர் சூட்டப்பட்டது. இவ்வரங்கு கலை ஆர்வலர்களையும், அடியார்களையும் கவர்வதாகவும், கோவிலின் சிறப்பையும் அழகையும் மேலும் உயர்த்துவதாகவும் அமைந்துள்ளது என்று கூறலாம்.

### கல்யாண மண்டபம்

கல்யாண மண்டபம் சீர்செய்யப்பட்டு மின்விசிறிகளும், தேவையான அளவு மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளதுடன், இருக்கை வசதிக்காக கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு பாவனைக்கு இடப்பட்டுள்ளன.

### சப்பரத் தரிப்பிடம்

சீரான தரிப்பிடமின்றி தற்காலிகமாக ஓலைப் பாதுகாப்புடன் இருந்த சப்பரத்தை பாதுகாக்குமுகமாக பெரிய சப்பரத் தரிப்பிடம் ஆலய மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. இத் தரிப்பிடம் சப்பரத்துக்குப் பாதுகாப்பாகவும் நிரந்தர கட்டிடமாகவும் அமைந்துள்ளமை நீண்ட காலத் தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்கின்றது.

**மங்கல வாத்தியகாரருக்கான இருப்பிட வசதி**

மங்கல வாத்தியக்காரர் தங்குவதற்கு இருப்பிட வசதி இல்லாத காரணத்தால் கோவிலின் வடமேற்கு மூலையில் இவர்கள் தங்குவதற்கான நிரந்தர வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இவர்களது தேவையைப் பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நந்தவனம்**

கோவிலுக்குத் தேவையான மலர்வகையில் ஓரளவையேனும் பெற்றுக் கொள்ளும் வகையில் "நந்தவனம்" ஒன்று இல்லாத குறையை நிவர்த்தி செய்ய வெண்டுமெனத் தீர்மானித்தது அமரர் செ.சதாசிவம் அவர்களால் கோவிலுக்கு தர்மசாதனம் செய்யப்பட்ட காணியில் நந்தவனமொன்று அமைக்கப்பட்டு பூமரங்கள் நாட்டப்பட்டு வளர்ச்சி பெற்றுள்ளன. தற்போது பூக்கள் ஆயக் கூடிய தாகவுள்ளது. காலகெதியில் கோவிற் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை.

**ஏனைய சேவைகள்**

**அ. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு**

பாலர்களுக்கான ஆரம்ப கல்வியை - ஊதியமின்றித் தொண்டு மனப் பான்மையில் கற்பித்துவரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வழமையான கொடுப்பனவு 2011ஆம் ஆண்டிலும் வழங்கப்பட்டது. இத்தகைய ஆதரவானது - குழந்தைப் பருவம் முதல் பிள்ளைகள் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் ஒன்ற சேரக் கற்று நல்லதொரு சமுதாய வளர்ச்சிக்கு உந்துகோலாக அமையும். எமது ஆதரவின் மூலம் ஐந்து முன்பள்ளிகள் பயனடைந்து வருகின்றன.

**ஆ. வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சை அறை**

நயினாதீவு கிராம வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கென புறம்பான அறையொன்று தேவைப்படுவதாக வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்தமைக்கு அமைய அவசர சிகிச்சை அறை ஒன்று மலசலகூட வசதிகளுடன் கோவில் நிதியிலிருந்து அமைத்துக் கொடுக்கப்பட்டது.

**இ. வைத்திய அதிகாரியின் சேவை நயப்பு**

ஒன்றரை வருட காலமாக நயினாதீவு வைத்தியசாலையில் பொறுப்பதி காரியாக இருந்து சிறந்த சேவையாற்றிய டாக்டர் புஸ்பராஜன் அவர்களின் சேவையைப் பாராட்டி பிரிவுபசார வைபவம் ஒன்று அறங்காவலர் சபையால் நடாத்தப்பட்டு ஞாபகச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது. நயினாதீவு பொது ஸ்தாபனங்களும் சான்றோர்களும் இவ்வைபவத்திற் கலந்து கொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

### விசேட மகாசபைக் கூட்டம்

மகாகும்பாபிஷேகம், திருப்பணிக்கான நிதி என்பன தொடர்பில் மகாசபையின் அபிப்பிராயங்கள், அனுமதிகள் பெறும் நோக்கில் விசேட மகாசபைக் கூட்டம் ஒன்று 25.09.2011 இல் நடைபெற்றது. அம்பாளுக்குத் தேவையான திரு ஆபரணங்களுக்கு மேலதிகமாகவுள்ள பவுண் காணிக்கைப் பொருட்களை ஏலவிற்பனை செய்து திருப்பணிக்கான நிதியை பெற்றுக் கொள்வதற்கு மகாசபை அனுமதி வழங்கியது. இதன் பிரகாரம் பவுணி காணிக்கைப் பொருட்களில் ஒரு பகுதி விற்பனை செய்யப்பட்டு திருப்பணி நிதிக்கு மாற்றப்பட்டது.

### வெள்ளிக் குடைகள்

காணிக்கையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வெள்ளிப் பொருட்களின் ஒரு பகுதி உருக்கப்பட்டு - அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளான விநாயகர், சுப்பிரமணியர்களுக்கான வெள்ளிக் குடைகள் செய்யப்பட்டதுடன், விபூதி மடல் ஒன்றும் செய்யப்பட்டது.

### இரும்புத் பொருள் விற்பனை

தேவையற்றவைகளாக, நீண்ட காலமாக ஆலய வளாகத்தில் ஆங்காங்கே கிடந்த பழைய இரும்புப் பொருள்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுப் பெறப்பட்ட நிதி - திருப்பணி நிதிக்குச் சேர்க்கப்பட்டது.

### படகு விற்பனை

கோவிலுக்குச் சொந்தமான படகுகள் தொடர்பிலான கடந்த கால வரவு செலவுகளைக் கருத்திற் கொண்ட போது இலாப மீட்டாத நிலையில் - வியாபார நோக்குடன் செயற்பட முடியாத காரணத்தால் படகுகளை விற்பனை செய்வதற்கு எடுக்கப்பட்ட முடிவின்படி பகிரங்கக் கேள்வி கோரல் மூலம் ஒரு படகு விற்பனை செய்யப்பட்டு பெறப்பட்ட நிதி திருப்பணி நிதியில் சேர்க்கப்பட்டது.

### இரண்டு சில்லு உழவுயந்திரம் கொள்வனவு

கோவிலின் தேவையைக் கருத்திற்கொண்டு புதிய இரண்டு சில்லு உழவு இயந்திரம் ஒன்று அதற்குரிய பெட்டியுடன் கொள்வனவு செய்யப்பட்டு கோவிலின் சொத்துக்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

### பாலஸ்தானம்

கோவிற் புனரமைப்பை முன்னிட்டு பாலஸ்தான கும்பாபிஷேகம் 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி நடைபெற்றதுடன், மகாகும்பாபிஷேகத் துக்குரிய நாளும் நிச்சயிக்கப்பட்டது. பாலஸ்தான கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள் யந்திர பூசைகள் நடாத்தப்பட்டன.

### கோவிற் புனரமைப்பும் சிற்ப வேலைப்பாடுகளும்

கோவிலின் உட்பிகாரக் கொட்டகை - நிரந்தரமான சீமெந்துக் கூரையாக அமைக்கப்பட்டு சிற்ப வேலைகள் செய்யப்படுவதன் மூலம் சக்தி பீடத்தின்

பெருமையையும் சிறப்பையும் உயர்த்தலாம் என்றும், கோவிலின் வரலாற்றுக்கு அமைய கலைக்கோவிலாக மாற்ற வேண்டும் என்றும் எழுச்சியுடன் புனர் நிர்மாண வேலைகள் பாரிய வேலைத் திட்டத்துடன் முன்னெடுக்கப்பட்டன. 2011 இறுதியில் பெரும்பகுதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

**சிரமதானப் பணி**

பாரிய கட்டுமானப் பணிகள் காரணமாக ஆலய உட்பிரகாரத்திலும் வெளிப்பிரகாரத்திலும் சிதறிக் கிடந்த சிதைவடைந்த கற்கள் கழிவுப் பொருள்கள் என்பன நயினாதீவு மக்களினதும் மகாசபை உறுப்பினர்களினதும் ஒத்துழைப்புடன் சிரமதான அடிப்படையில் அகற்றப்பட்டு மகாகும்பாபிஷேகத் துக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இச்சிரமதானம் பணியின் போது பொது நிறுவனங்களும் கிராம அலுவலர்களும் தமது ஒத்துழைப்பை வழங்கி சிரமதானப் பணியை சீராகச் செய்ய உதவினார்கள்.

**மகா கும்பாபிஷேகம்**

2011ஆம் ஆண்டு நிறைவில் பெரும்பகுதி நிர்மாணப் பணிகள் நிறைவுற்ற காரணத்தால் பாலஸ்தாபனத்தின்போது நிச்சயிக்கப்பட்ட 29.01.2012 இல் மகா கும்பாபிஷேகம் மிகமிகச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெறுவதற்கு அம்பாள் திருவருள் பாலித்தமையை நினைதொறும் நினைதொறும் எல்லோர் நெஞ்சங்களும் புளங்காகிதம் அடைகின்றன.

**குருமணிகளின் சேவை**

கோவிற் புனருத்தாரணப் பணியின்போது தேவையான ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைப்பு நல்கியதுடன் கும்பாபிஷேகம் பெருஞ்சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்றவகையில் கிரியைகளை ஒழுங்குசெய்தும் ஏனைய குருமார்களை ஒழுங்கு செய்தும் ஒத்துழைத்த கோவிற் பரம்பரை மஹோற்சவக் குருமணி அவர்களுக்கும் பரம்பரை நித்தியபூசைக் குருமணிகளுக்கும் அறங்காவலர் சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருப்பணி வேலைத் தொழிலாளர் சேவை**

2011இல் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான திருப்பணி வேலைகள் அனைத்தும் குறுகிய காலத்துள் நிறைவு பெறுவதற்கு தொழிலாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கோவிற் பணியாளர் சேவை**

புனரமைப்புப் பணிகள்,கும்பாபிஷேகத்தை முன்னிட்ட பணிகள் ஆகிய பணிகளில், எமது கோவிற் பணியாளர்கள் அனைவரும் தமது வழமையான வேலைகளுக்கு மேலாக பங்கு கொண்டு பெருந்தொண்டு புரிந்துள்ளனர். இவர்களுக்கும் சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**காணிக் கொள்வனவு**

கோவிலின் எதிர்கால அபிவிருத்திப்பணியின் பொருட்டு சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக்குருக்களிடம் 6 பரப்பு அளவுடைய காணி கொள்வனவு செய்யப்பட்டு பராமரிக்கப் படுகின்றது.

**நிறைவு**

அம்பாளுடைய பணிகளைச் செவ்வனே முன்னெடுத்துச் செல்வதற்கு அம்பாளின் துணையால் எமக்குப் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிவரும் அனைத்து அடியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ந.மோகனரூபன்
செயலாளர்

**26.02.2011 தொடக்கம் 31.12.2011 வரை நடைபெற்ற அறங்காவலர் சபைக் கூட்ட விபரங்கள்**

சாதாரண கூட்டங்கள் - 12 விசேட கூட்டங்கள் - 05

| | சமூகமளித்த அறங்காவலர்கள் | சமூகமளித்த கூட்ட எண்ணிக்கை | சமூகமளித்த விசேட கூட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆ.தியாகராசா | 12 | 05 |
| 2. | ந.மோகனரூபன் | 12 | 05 |
| 3. | கோ.வாமதாசன் | 12 | 05 |
| 4. | த.வசந்தாதேவி | 11 | 05 |
| 5. | கு.சரவணபவானந்தன் | 10 | 05 |
| 6. | க.பரமலிங்கம் | 11 | 05 |
| 7. | வீ.தங்கராசா | 12 | 05 |
| 8. | அ.சர்வானந்தராசா | 09 | 05 |
| 9. | க.நாகேஸ்வரன் | 05 | 02 |
| 10. | கா.பொ.இ.குலசிங்கம் | 11 | 05 |
| 11. | த.அமிர்தராசா | 12 | 05 |
| 12. | க.மாணிக்கவாசகர் | 11 | 04 |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு
## கணக்காய்வாளர் அறிக்கை

மார்கழி 31, 2011ல் உள்ளபடியான ஐந்தொகை, அதனுடன் தொடர்புடைய முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று அத்துடன் ஏனைய விளக்கக் குறிப்புக்கள் என்பவற்றைக் கொண்டே இத்துடன் இணைக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் நிதிக்கூற்றுக்களை நாம் கணக்காய்வு செய்துள்ளோம்.

எமது அபிப்பிராயப்படி, எமது பரிசீலனையின் மூலம் தென்படுவதிலிருந்து, கோவிலினால் 31 மார்கழி, 2011ல் முடிவடைந்த வருடத்தில் முறையான கணக்குப் புத்தகங்கள் பேணப்பட்டுள்ளன என்றும் எமது சிறந்த தகவல்களுக்கு அமையவும் எமக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் எம்மால் 11.10.2012ல் வழங்கப்பட்ட முகாமைக் கடிதத்தின் கருத்திற்கு உட்பட ஐந்தொகையும், அதனோடு தொடர்புடைய வருமானக் கூற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இசைவானவாறு 31 மார்கழி, 2011ல் உள்ள கோவிலின் நிலைமை, முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் ஆகியவற்றின் உண்மையானதும், நேர்மையானதுமான நோக்கினை நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றது எனலாம்.

எம். இராஜநாயகம் அண்ட் கம்பனி
பட்டயக்கணக்காளர்கள்

திகதி: 2012ம் ஆண்டு ஐப்பசி, 11.

Chartered Accountants

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு
## 31.12.2011ல் உள்ளபடியான ஐந்தொகை

| | குறிப்பு | ரு | ரு |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| நிலையான சொத்துக்கள் | 01 | | 41,273,889.43 |
| நிலையான வைப்புக்கள் | 02 | | 51,000,000.00 |
| | | | 92,273,889.43 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 03 | 78,071,895.25 | |
| பெறவேண்டிய கணக்குகள் | 04 | 227,234.01 | |
| சேமிப்புக் கணக்குகள் | 05 | 2,220,796.98 | |
| வங்கிகளிலுள்ள காசு | 06 | 4,374,149.04 | |
| கையிலுள்ள காசு | | 550,490.09 | |
| | | | 85,444,565.37 |
| **மொத்த சொத்துக்கள்** | | | **177,718,454.80** |
| **நிதிமூலங்களும் பொறுப்புக்களும்** | | | |
| நிதி மூலங்கள் | | | |
| பொது நிதி | 07 | | 111,917,821.70 |
| திரண்ட நிதி | 08 | | 11,407,548.09 |
| திருப்பணி நிதி | 09 | | 1,483,264.62 |
| ஏனைய நிதிகள் | 10 | | 52,678,387.91 |
| | | | 177,487,022.32 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 11 | 24,532.48 | |
| கொடுக்க வேண்டிய செலவுகள் | | 206,900.00 | |
| | | | 231,432.48 |
| **மொத்த நிதிமூலங்களும் பொறுப்புக்களும்** | | | **177,718,454.80** |

தலைவர்      பொருளாளர்      செயலாளர்

திகதி: 2012ம் ஆண்டு ஐப்பசி, 11.

M. RAJANAYAGAM & CO
Chartered Accountants
JAFFNA

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு
## 31.12.2011ல் முடிவடைந்த வருடத்திற்குரிய வருமானக் கூற்று

| | குறிப்பு | ரூ |
|---|---|---|
| **வருமானம்** | | |
| விற்பனைகள் | 12 | 2,967,162.75 |
| சேவைகள் | 13 | 3,648,896.50 |
| தினசரி அன்னதானம் | 14 | 88,226.50 |
| அர்ச்சனை ரிக்கற் | | 2,606,115.00 |
| உண்டியல் | | 3,300,428.50 |
| வாடகை - கடைகள் | | 338,950.00 |
| மகாசபை உறுப்புரிமைக் கட்டணம் | | 24,510.00 |
| காணிக்கை - அடியார்கள் | | 978,400.00 |
| அடிமை சாசனம் | | 946,989.00 |
| இரும்புப் பொருட்கள் (பழையது) விற்பனை | | 97,989.00 |
| பெற்ற வட்டிகள் | | 1,746,983.42 |
| | | **16,744,650.67** |
| **செலவுகள்** | | |
| உயர்திருவிழா, விசேட உற்சவ, பூசை அபிஷேக, ஏனையவைகள் | 15 | 2,900,027.73 |
| பாலஸ்தாபனம் | | 219,776.00 |
| கும்பாபிஷேகம் | | 940,305.00 |
| சம்பளம் - நிரந்தரப் பணியாளர்கள் | | 4,092,727.00 |
| சம்பளம் - தற்காலிகப் பணியாளர்கள் | | 4,002,144.13 |
| பணியாளர்கள் சீருடை | | 44,700.00 |
| நலன்புரி, உபசரணைகள் | | 339,896.00 |
| இந்து சமய ஊக்குவிப்பு அன்பளிப்புக்கள் | | 192,800.00 |
| காகிதாதிகள், அச்சடித்தல், போட்டோப்பிரதிகள் | | 589,599.00 |
| மின்சாரம், எரிபொருள் பாவனை, மின் இயந்திரங்கள் பராமரிப்பு | | 1,058,848.50 |
| தொலைத் தொடர்புகள் | | 25,135.00 |
| நீர் வழங்கல் கட்டணம் | | 99,170.25 |
| தபால், முத்திரைகள் | | 334,541.00 |
| மாதாந்த கணக்காய்வுக் கட்டணம் | | 166,100.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 60,000.00 |
| கணக்கியல் கட்டணம் | | 29,000.00 |
| காவல் செலவுகள் | | 835.00 |
| விளம்பரங்கள் | | 272,032.20 |
| உழவு இயந்திரம் ஓட்டம், பராமரிப்புக்கள் | 16 | 50,713.00 |
| கொடுத்த அன்பளிப்பு | | 48,800.00 |
| திருத்தங்கள், பராமரிப்புக்கள் | 17 | 362,672.94 |
| வங்கிக்கட்டணம், பற்றுவரி | | 97,893.42 |
| விற்பனைக்காக காணிக்கை நகைகள் தரம்பிரித்தல் | | 31,450.00 |
| புகைப்படம் | | 6,000.00 |
| யாழ் தொடர்பகம் (மாநகரசபை வரி, வாடகை) | | 28,960.00 |
| | | **15,994,126.17** |
| தேறிய வருமானம் திரண்டநிதிக்கு மாற்றியது | | **750,524.50** |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

### 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

நிலையான சொத்துக்கள் — குறிப்பு - 01

| விபரம் | 01.01.2011ல் மீதி ரூ | இவ்வருடம் சேர்ப்புக்கள் ரூ | இவ்வருடம் விற்பனை ரூ | 31.12.2011ல் மீதி ரூ |
|---|---|---|---|---|
| காணிகள் | 1,143,055.00 | - | - | 1,143,055.00 |
| காணி, கட்டிடங்கள் | 16,154,672.93 | - | - | 16,154,672.93 |
| தேர்கள் - பிள்ளையார் | 902,578.00 | - | - | 902,578.00 |
| - அம்பாள் | 1,210,000.00 | - | - | 1,210,000.00 |
| - முருகன் | 1,703,075.00 | - | - | 1,703,075.00 |
| முத்துச் சப்பரம் | 1,500,000.00 | - | - | 1,500,000.00 |
| மின்சார இயந்திரங்கள், உபகரணங்கள் | 1,559,065.00 | - | - | 1,559,065.00 |
| வாகனங்கள் | 998,650.00 | - | - | 998,650.00 |
| திருஆபரணங்கள் - பவுண் | 3,257,940.00 | - | - | 3,257,940.00 |
| வெள்ளிகள், வெள்ளிக்கவசங்கள், திருவாசிகள் | 357,990.00 | 88,450.00 | - | 446,440.00 |
| தளபாடங்கள், பொருத்துக்கள் | 1,140,756.00 | 372,050.00 | - | 1,512,806.00 |
| ஒலிபெருக்கி மற்றும் சாதனங்கள் | 17,450.00 | 7,900.00 | - | 25,350.00 |
| இரும்புப் பொருட்கள், பெட்டகங்கள் | 329,076.00 | 19,750.00 | - | 348,826.00 |
| சமையல் உபகரணங்கள் | 457,825.00 | 77,350.00 | - | 535,175.00 |
| வண்டில்கள் | 33,750.00 | - | - | 33,750.00 |
| அலுவலக உபகரணங்கள் | 368,945.00 | 1,400.00 | - | 370,345.00 |
| தீபங்கள், விளக்குகள்,. மணிகள், | | | - | - |
| தாம்பாளங்கள், குடங்கள் | 2,615,345.00 | 556,665.00 | - | 3,172,010.00 |
| பீடங்கள், தம்பங்கள், ஊஞ்சல்கள் | 75,700.00 | - | - | 75,700.00 |
| குடைகள், சாமரைகள் | 770,655.00 | 180,950.00 | - | 951,605.00 |
| காவலர் உபகரணங்கள் | 9,982.50 | - | - | 9,982.50 |
| தண்ணீர்த் தாங்கிகள் | 50,000.00 | - | - | 50,000.00 |
| பவுண் நிறுக்கும் தராசுகள் | 23,200.00 | 18,000.00 | - | 41,200.00 |
| நீர் இறைக்கும் இயந்திரங்கள் | 60,850.00 | - | - | 60,850.00 |
| தொலைபேசிகள், இணைப்புக்கள் | 74,703.00 | - | - | 74,703.00 |
| படகுகள் | 1,629,048.50 | 93,780.00 | 813,000.00 | 909,828.50 |
| முச்சக்கரவண்டி | 200,000.00 | - | - | 200,000.00 |
| கணனிகள், துணைப்பாகங்கள் | 100,600.00 | 78,000.00 | - | 178,600.00 |
| மீதி கீ.கொ.செ | 36,744,911.93 | 1,494,295.00 | 813,000.00 | 37,426,206.93 |

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

நிலையான சொத்துக்கள் — குறிப்பு - 01

| விபரம் | 01.01.2011ல் மீதி | இவ்வருடம் சேர்ப்புக்கள் | இவ்வருடம் விற்பனை | 31.12.2011ல் மீதி |
|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ |
| மீதி கீ.கொ.வ | 36,744,911.93 | 1,494,295.00 | 813,000.00 | 37,426,206.93 |
| கையடக்கதொலைபேசி (யாழ் தொடர்பகம்) | 10,900.00 | - | - | 10,900.00 |
| தூசு துப்பரவாக்கும் இயந்திரங்கள் | 45,500.00 | 25,300.00 | - | 70,800.00 |
| நான்கு சில்லு உழவு இயந்திரங்கள் (லான்ட் மாஸ்டர்) | 227,802.50 | 403,450.00 | - | 631,252.50 |
| குளிர்சாதனப்பெட்டி | 171,000.00 | - | - | 171,000.00 |
| நூலகத் தளபாடங்கள், உபகரணங்கள் | 124,000.00 | - | - | 124,000.00 |
| பொலிசிங் மோட்டார் உபகரணங்கள் | 99,340.00 | - | - | 99,340.00 |
| போட்டோப்பிரதி இயந்திரம் | 160,000.00 | - | - | 160,000.00 |
| வைபிறேற்றர் | 60,000.00 | - | - | 60,000.00 |
| கொங்கிறீற் மிக்ஸர் | 140,000.00 | - | - | 140,000.00 |
| போர்க்கர் கேபிள் | 17,000.00 | - | - | 17,000.00 |
| எலக்ரிக் கொயிஸ்ற் | 95,000.00 | - | - | 95,000.00 |
| கொன்ரெயினர் பெட்டி | 21,000.00 | - | - | 21,000.00 |
| உழவு இயந்திரம்(ட்ரக்டர்) | 1,300,000.00 | - | - | 1,300,000.00 |
| பாரம் தூக்கி (லிப்ற்) | 69,000.00 | - | - | 69,000.00 |
| சுகாதார உபகரணங்கள் | 11,990.00 | 6,500.00 | - | 18,490.00 |
| கண்காணிப்புக் கமராக்கள், சாதனங்கள் | 336,900.00 | - | - | 336,900.00 |
| ஹண்டர் வாகனம் | 500,000.00 | - | - | 500,000.00 |
| பணம் கணக்கிடும் இயந்திரம் (Teller machine) | - | 23,000.00 | - | 23,000.00 |
| | **40,134,344.43** | **1,952,545.00** | 813,000.00 | **41,273,889.43** |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

### 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

நிலையான வைப்புக்கள் குறிப்பு - 02

| | ரூ |
|---|---|
| இலங்கை வர்த்தக வங்கி, வேலணை | |
| கணக்கு இலக்கம் | |
| 3060000491 | 1,000,000.00 |
| 3060007358 | 500,000.00 |
| 3060012254 | 500,000.00 |
| 3060012255 | 500,000.00 |
| 3060012256 | 500,000.00 |
| 3060012257 | 500,000.00 |
| 3060012258 | 500,000.00 |
| 3060012259 | 500,000.00 |
| 3060012260 | 500,000.00 |
| 3060012261 | 500,000.00 |
| 3060012262 | 500,000.00 |
| 3060022820 | 1,000,000.00 |
| 3060022821 | 1,000,000.00 |
| 3060004621 | 500,000.00 |
| 3060004622 | 500,000.00 |
| 3060004623 | 500,000.00 |
| 3060004624 | 500,000.00 |
| 3060004625 | 500,000.00 |
| 3060008102 | 500,000.00 |
| 3170901092 தொடக்கம் 3170901100 வரை | 9,000,000.00 |
| 3170901102 தொடக்கம் 3170901122 வரை | 21,000,000.00 |
| மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை | |
| கணக்கு இலக்கம் | |
| 6001 - 2678(03911) | 1,000,000.00 |
| 6001 - 2687(03912) | 1,000,000.00 |
| 6001 - 2696(03913) | 1,000,000.00 |
| மீதி கீ.கொ.செ | 44,000,000.00 |

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| நிலையான வைப்புக்கள் | குறிப்பு - 02 |
|---|---|
| | ரூ |
| மீதி கீ.கொ.வ | 44,000,000.00 |
| மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை | |
| கணக்கு இலக்கம் | |
| 6001 - 2703(03914) | 1,000,000.00 |
| 6001 - 2712(03915) | 1,000,000.00 |
| 6001 - 2721(04181) | 1,000,000.00 |
| 6001 - 2730(04182) | 1,000,000.00 |
| 6001 - 2749(04183) | 1,000,000.00 |
| 6001 - 2758(04184) | 1,000,000.00 |
| 6001 - 2767(04185) | 1,000,000.00 |
| | **51,000,000.00** |

| இருப்புக்கள் | குறிப்பு - 03 |
|---|---|
| | ரூ |
| காணிக்கை நகைகள் (குறிப்பு - 3.1) | 75,119,436.00 |
| விற்பனைக்கான நகைகள் (குறிப்பு - 3.2) | 619,350.00 |
| பட்டுப் புடவைகள் (குறிப்பு - 3.3) | 981,600.00 |
| விற்பனைக்கான பட்டுப் புடவைகள் (குறிப்பு - 3.4) | 28,900.00 |
| அம்பாள் படங்கள் | 265,328.25 |
| அம்பாள் புத்தகங்கள் | 296,272.50 |
| காப்பு நூல்கள் | 327,157.00 |
| அன்னதானப் பொருட்கள் | 198,146.00 |
| அர்ச்சனைக்கடைப் பொருட்கள் | 38,583.00 |
| பூசை, அபிஷேகப் பொருட்கள் | 147,122.50 |
| | **78,071,895.25** |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

### 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**விற்பனைக்கான பட்டுப் புடவைகள் இருப்பு** — குறிப்பு - 3.4

| | எண்ணிக்கை | ரு |
|---|---|---|
| 01.01.2011ல் மீதி. கீழ். கொ. வ | 09 | 28,900.00 |
| கூட்டுக: பட்டுப் புடவைகள் இருப்புக் கணக்கிலிருந்து மாற்றியது | 1,075 | 971,600.00 |
| | 1,084 | 1,000,500.00 |
| கழிக்குக: இவ்வருடம் விற்பனை | 889 | 778,800.00 |
| கொடுத்த அன்பளிப்புக்கள் | 186 | 192,800.00 |
| | **09** | **28,900.00** |

**பெறவேண்டிய கணக்குகள்** — குறிப்பு - 04

| | ரு |
|---|---|
| வருமதியாளர்கள் | |
| திருப்பணிச்சபை | 74,976.00 |
| திரு. மு. நா. நடராசா | 132,258.01 |
| பணியாளர்கள் கடன் கணக்கு | 20,000.00 |
| | **227,234.01** |

**சேமிப்புக் கணக்குகள்** — குறிப்பு - 05

| | ரு |
|---|---|
| மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை. | |
| கணக்கு இல: 2001-7-0005697(39006) | 1,198,591.96 |
| கணக்கு இல: 2001-7-0005713(39024) | 11,286.86 |
| தபாலகம் - நயினாதீவு | |
| கணக்கு இல: U 483398 | 216,730.22 |
| இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை | |
| கணக்கு இல: 7693781 (101214) | 794,187.94 |
| | **2,220,796.98** |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

### 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**காணிக்கை நகைகள் இருப்பு** குறிப்பு - 3.1

| | கி.மி.கிராம் | ரூ |
|---|---|---|
| 01.01.2011ல் மீதி. கீழ். கொ. வ | 29,848.030 | 32,136,830.00 |
| கூட்டுக: பொது நிதிக்கு மாற்றியது | | |
| முன்னைய ஆண்டுகளின் பெறுமதி வித்தியாசம் சீராக்கியது | - | 87,255,290.00 |
| இவ்வருடம் அடியார்களிடமிருந்து பெற்றது | 3,129.080 | 12,516,320.00 |
| இவ்வருடம் பவுண்கள் நிறையிடப்பட்ட போது மேலதிகம் | 10.400 | 41,600.000 |
| விற்பனைக்கான பவுண்கள் பெறுமதியிடப்பட்ட போது மேலதிகம் | - | 15,668,746.00 |
| | 32,987.510 | 147,618,786.00 |
| கழிக்குக: விற்பனைக்காக மாற்றியது | 14,094.951 | 72,048,550.00 |
| பொது நிதிக்கு மாற்றியது | | |
| படம் போடப்பட்ட போது சேதாரப் பெறுமதி | 100.000 | 400,000.00 |
| கொடுத்த அன்பளிப்பு | 12.200 | 48,800.00 |
| கோவில் பாவனை (நவக்கிரகம்) | 0.500 | 2,000.00 |
| | **18,779.859** | **75,119,436.00** |

**விற்பனைக்கான நகைகள் இருப்பு** குறிப்பு - 3.2

| | கி.மி.கிராம் | ரூ |
|---|---|---|
| 01.01.2011ல் மீதி. கீழ். கொ. வ | 356.650 | 316,850.00 |
| கூட்டுக: காணிக்கை நகைகள் இருப்புக் கணக்கிலிருந்து மாற்றியது | 14,094.951 | 72,048,550.00 |
| | 14,451.601 | 72,365,400.00 |
| கழிக்குக: இவ்வருடம் விற்பனை | 14,034.450 | 71,746,050.00 |
| | **417.151** | **619,350.00** |

**பட்டுப் புடவைகள் இருப்பு** குறிப்பு - 3.3

| | எண்ணிக்கை | ரூ |
|---|---|---|
| 01.01.2011ல் மீதி. கீழ். கொ. வ | 1,559 | 1,247,200.00 |
| கூட்டுக: பொது நிதிக்கு மாற்றியது | | |
| இவ்வருடம் அடியார்களிடமிருந்து பெற்றது | 743 | 594,400.00 |
| விற்பனைக்கான பட்டுப் புடவைகள் | | |
| பெறுமதியிடப்பட்ட போது மேலதிகம் | 0 | 111,600.00 |
| | 2,302 | 1,953,200.00 |
| கழிக்குக: விற்பனைக்காக மாற்றியது | 1,075 | 971,600.00 |
| | **1,227** | **981,600.00** |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

### 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| செலுத்த வேண்டிய கணக்குகள் | குறிப்பு - 11 |
| --- | --- |
| | ரூ |
| சென்மதியாளர் | |
| க. ஜீவசீலன் | 14,032.48 |
| பணியாளர்கள் பிணைப்பணம் | |
| சொ. சந்திரபாலன் | 2,000.00 |
| நா. யோகநாதன் | 5,000.00 |
| செ. கணேசலிங்கம் | 1,500.00 |
| அ. குகதாசன் | 2,000.00 |
| | **24,532.48** |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

### 31.12.2011ல் முடிவடைந்த வருடத்திற்குரிய பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு

| | ரூ | ரூ |
|---|---|---|
| 01.01.2011ல் மீதிகள் | | |
| வங்கிகளிலுள்ள காசு | | |
| நடைமுறைக் கணக்குகள் | | |
| இலங்கை வர்த்தக வங்கி, | | |
| வேலணை - கணக்கு இல:1060012330 | | 1,585,327.81 |
| இலங்கை வர்த்தக வங்கி, | | |
| புறக்கோட்டை - கணக்கு இல: 01-2426285-01 | | 936,462.94 |
| இலங்கை வங்கி, | | |
| ஊர்காவற்றுறை- கணக்கு இல: 0007687860 (3117) | | 2,570,000.46 |
| சேமிப்புக் கணக்குகள் | | |
| மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை | | |
| கணக்கு இல: 2001-7-0005697(39006) | | 2,782,531.24 |
| கணக்கு இல: 2001-7-0005713(39024) | | 10,853.61 |
| இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை | | |
| கணக்கு இல: 7693781 (101214) | | 1,733,406.74 |
| தபாலகம், நயினாதீவு | | |
| கணக்கு இல: U 483398 | | 140,354.32 |
| | | **9,758,937.12** |
| பெறுவனவுகள் | | |
| விசேட உற்சவ, பூசை அபிஷேகங்கள் | 3,058,896.00 | |
| மாதாந்த அர்ச்சனை | 963,512.80 | |
| உயர்திருவிழா, திருவிழா படித்தரம் | 952,800.00 | |
| கல்யாணமண்டபம் | 77,280.00 | |
| மண்டலாபிஷேகம் | 50,060.00 | |
| நானாவித வருமானம் | 667,062.97 | |
| | | 5,769,611.77 |
| அறுதி சாசனம் | | 946,989.00 |
| காணிக்கை - அடியார்கள் | | 978,400.00 |
| அர்ச்சனை ரிக்கற் | | 2,606,115.00 |
| வாடகை - கடைகள் | | 338,950.00 |
| மகாசபை உறுப்புரிமைக் கட்டணம் | | 24,510.00 |
| உண்டியல் வருமானம் | | 3,300,428.50 |
| பெற்ற வட்டி - பொது | | 1,746,983.42 |
| இரும்புப் பொருட்கள் (பழையது) விற்பனை | | 97,989.00 |
| உழவு இயந்திரம் ஓட்டம் | | 187,850.00 |
| மீதி கீ. கொ. செ | | 25,756,763.81 |

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

### 31.12.2011ல் முடிவடைந்த வருடத்திற்குரிய பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு

| | ரு | ரு |
|---|---|---|
| மீதி கீ. கொ. வ | | 25,756,763.81 |
| விற்பனைகள் மற்றும் சேவைகள் | | |
| காப்பு நூல்கள் | 2,665,550.00 | |
| அம்பாள் படங்கள் | 230,015.00 | |
| அம்பாள் புத்தகங்கள் | 155,700.00 | |
| அர்ச்சனைக் கடைப் பொருட்கள் | 6,679,015.00 | |
| காணிக்கைப் பட்டுப் புடவைகள் | 778,800.00 | |
| காணிக்கைப் பவுண்கள் | 71,746,050.00 | |
| போட்டோ பிரதியிடல் பகுதி | 101,201.00 | |
| | | 82,356,331.00 |
| பலபுள்ளி (தினசரி) அன்னதானம் | | |
| உண்டியல் வருமானம் - அடியார்கள் | 1,206,582.00 | |
| அன்பளிப்புக்கள் - அடியார்கள் | 1,614,298.00 | |
| | | 2,820,880.00 |
| படகு (நியைான சொத்து) விற்பனை | | 813,000.00 |
| வருமதியாளர் மீளளிப்பு - திரு. க. உருத்திரகுமாரன் | | 68,193.16 |
| பணியாளர் கடன் மீளப்பெற்றது | | 46,000.00 |
| முற்பணம் மீளளிப்பு - சில்லறைக்காசு | | 25,000.00 |
| திருப்பணி நிதி | | |
| உண்டியல் வருமானம் - அடியார்கள் | 2,828,388.50 | |
| அன்பளிப்புக்கள் - அடியார்கள் | 30,021,869.35 | |
| கேள்வி கோரல்கள் வைப்புக்கள் (மீளளிக்காத கட்டணம்) | 45,980.00 | |
| | | 32,896,237.85 |
| தினசரி அன்னதான நிதி | | 10,488,866.00 |
| | | **155,271,271.82** |

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## 31.12.2011ல் முடிவடைந்த வருடத்திற்குரிய பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு

| | ரூ | ரூ |
|---|---|---|
| கொடுப்பனவுகள் | | |
| உயர்திருவிழா, விசேட உற்சவ, பூசை | | |
| அபிஷேக, ஏனையவை | | 8,704,860.50 |
| பாலஸ்தாபனம் | | 219,776.00 |
| கும்பாபிஷேகம் | | 940,305.00 |
| விற்பனைகள் மற்றும் சேவைகள் | | |
| அர்ச்சனைக் கடைப்பொருட்கள் | | 2,543,567.50 |
| போட்டோ பிரதியிடல் பகுதி | | 71,248.00 |
| நூலகம் | | 10,030.00 |
| காப்பு நூல்கள் கொள்வனவு | | 405,500.00 |
| அம்பாள் படங்கள் கொள்வனவு | | 102,000.00 |
| அம்பாள் புத்தகங்கள் கொள்வனவு | | 180,000.00 |
| தினசரி அன்னதானம் | | 5,768,337.50 |
| பசுமாடுகள் பராமரிப்பு | | 30,376.50 |
| கல்யாண மண்டபம் | | 57,905.00 |
| போக்குவரத்து (பொருட்கள் கொள்வனவு) | | 23,620.00 |
| சம்பளம் - நிரந்தரப் பணியாளர்கள் | | 4,092,727.00 |
| சம்பளம் - தற்காலிகப் பணியாளர்கள் | | 4,002,144.13 |
| பணியாளர்கள் சீருடை | | 44,700.00 |
| நலன்புரி, உபசரணைகள் | | 339,896.00 |
| காகிதாதிகள், அச்சடித்தல், போட்டோப்பிரதிகள் | | 589,599.00 |
| மின்சாரம், எரிபொருள் பாவனை, மின் இயந்திரங்கள் பராமரிப்பு | | 1,058,848.50 |
| தொலைத் தொடர்புகள் | | 25,135.00 |
| நீர் வழங்கல் கட்டணம் | | 99,170.25 |
| தபால், முத்திரைகள் | | 334,541.00 |
| காவல் செலவுகள் | | 835.00 |
| மாதாந்த கணக்காய்வுக் கட்டணம் | | 126,200.00 |
| உழவு இயந்திரம் ஓட்டம், பராமரிப்புக்கள் | | 238,563.00 |
| திருத்தங்கள், பராமரிப்புக்கள் | | |
| வீதிகள், வடிகால்கள் | | 19,385.00 |
| அலுவலகம் | | 15,668.00 |
| லான்ட் மாஸ்டர் | | 69,043.94 |
| ஹன்டர் வாகனம் | | 47,945.00 |
| முச்சக்கரவண்டி | | 114,031.00 |
| காணிகள் | | 96,600.00 |
| மீதி கீ. கொ. செ | | 30,372,557.82 |

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## 31.12.2011ல் முடிவடைந்த வருடத்திற்குரிய பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு

| | ரூ | ரூ |
|---|---|---|
| மீதி கீ. கொ. வ | | 30,372,557.82 |
| விளம்பரங்கள் | | 272,032.20 |
| புகைப்படம் | | 6,000.00 |
| வங்கிக்கட்டணம், பற்றுவரி | | 97,893.42 |
| விற்பனைக்காக காணிக்கை நகைகள் தரம்பிரித்தல் | | 31,450.00 |
| யாழ் தொடர்பகம் (மாநகரசபை வரி, வாடகை) | | 28,960.00 |
| நிலையான சொத்துக்கள் கொள்வனவு | | |
| சமையல் உபகரணங்கள் | | 64,700.00 |
| தளபாடங்கள் பொருத்துக்கள் (மேசைகள், கதிரைகள்) | | 372,050.00 |
| பவுண் நிறுக்கும் தராசு | | 18,000.00 |
| ஒலிபெருக்கி சாதனம் (DVD player) | | 7,900.00 |
| நான்கு சில்லு உழவு இயந்திரங்கள் (லான்ட்மாஸ்டர்) | | 403,450.00 |
| சுகாதார உபகரணம் | | 6,500.00 |
| கணனி | | 78,000.00 |
| தூசு துப்பரவாக்கும் இயந்திரம் | | 25,300.00 |
| பணம் கணக்கிடும் இயந்திரம் (Teller machine) | | 23,000.00 |
| மூலதனச் செலவு - படகுகள் | | 93,780.00 |
| நிலையான வைப்புக்கள் | | |
| இலங்கை வர்த்தக வங்கி, வேலணை | | 30,000,000.00 |
| முற்பணம் - சில்லறைக்காசு | | 25,000.00 |
| கொடுத்த கடன் - பணியாளர்கள் | | 66,000.00 |
| திருப்பணி வேலைகள் | | |
| இராஜகோபுரம் அமைத்தல் | | 22,839,940.75 |
| பொது - கட்டிடங்கள் புனரமைப்பு மற்றும் ஏனைய வேலைகள் | | 14,671,142.50 |
| ஆலய உட்கட்டுமான வேலைகள் (புனருத்தாரணம்) | | 46,859,865.00 |
| அறக்கொடை நிதிக் கொடுப்பனவு | | 1,002,500.00 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | | |
| மாதாந்த கணக்காய்வுக் கட்டணம் (ஐப்பசி,2010 - மார்கழி,2010) | | 39,900.00 |
| கணக்கியல் கட்டணம் - ஆண்டு, 2009 | | 48,000.00 |
| கணக்காய்வுக் கட்டணம் - ஆண்டு, 2009 | | 49,000.00 |
| மின்கட்டணம் - ஆண்டு, 2010 | | 46,615.00 |
| செண்டியாளர்கள் கணக்கு - ஆண்டு 2010 | | |
| சி. சிவகுமார் | | 10,570.00 |
| மா. சந்திரசேகரம் | | 78,240.00 |
| வை. அருணகிரிநாதன் | | 32,145.00 |
| வை. உதயசேகரம் | | 93,950.00 |
| கே. வாமதாசன் | | 4,862.00 |
| மீதி கீ. கொ. செ | | 147,769,303.69 |

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## 31.12.2011ல் முடிவடைந்த வருடத்திற்குரிய பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு

| | ரூ | ரூ |
|---|---|---|
| மீதி கீ. கொ. வ | | 147,769,303.69 |
| சென்மதியாளர்கள் கணக்கு - ஆண்டு 2010 | | |
| கே. நவரெத்தினம் | | 21,300.00 |
| ச. பாலேஸ்வரசர்மா | | 4,500.00 |
| த. குகராஜ் | | 17,400.00 |
| இ. சசிகுமார் | | 14,200.00 |
| செ. அம்பிகைதாசன் | | 2,000.00 |
| இ. சிவபாலன் | | 8,372.00 |
| மு. யோகலிங்கம் | | 3,333.00 |
| க.ஜெகன் | | 7,000.00 |
| முன்பள்ளி சிறுவர் பாடசாலைகள் - நயினாதீவு | | 27,500.00 |
| தினக்குரல் பத்திரிகை நிறுவனம் | | 4,125.00 |
| ஸ்ரீரங்கன் | | 8,030.00 |
| திரு. என். ஆர். சிவேந்திரன் | | 210,000.00 |
| சிவஸ்ரீ. கைலை வாமதேவக்குருக்கள் | | 12,000.00 |
| க. ஜீவசீலன் | | 16,772.02 |
| | | 148,126,835.71 |
| மீதிகள் | | 7,145,436.11 |

31.12.2011ல் மீதிகள்

| | |
|---|---|
| வங்கிகளிலுள்ள காசு | |
| சேமிப்புக் கணக்குகள் | |
| மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை | |
| கணக்கு இல: 2001-7-0005697(39006) | 1,198,591.96 |
| கணக்கு இல: 2001-7-0005713(39024) | 11,285.86 |
| இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை | |
| கணக்கு இல: 7693781 (101214) | 794,187.94 |
| லகம், நயினாதீவு | |
| கணக்கு இல: U 483398 | 216,730.22 |
| றைக் கணக்குகள் | |
| ங்கை வர்த்தக வங்கி, | |
| வேலணை - கணக்கு இல:1060012330 | 3,101,034.90 |
| ங்கை வர்த்தக வங்கி, | |
| புறக்கோட்டை - கணக்கு இல: 01-2426285-01 | 1,207,691.74 |
| ங்கை வங்கி, | |
| ஊர்காவற்றுறை- கணக்கு இல: 0007687860 (3117) | 65,422.40 |
| ள்ள காசு | 550,490.09 |
| | 7,145,436.11 |

தலைவர் பொருளாளர் செயலாளர்

அறங்காவலர் சபை

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,

நயினாதீவு

ஐயா,

## கணக்காய்வு நிதியாண்டு - 31.12.2011

மேற்படி கணக்காய்வு தொடர்பான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் 2011ம் ஆண்டிற்கான கோவிலின் நிதிக்கூற்றுக்கள் பற்றிய எமது அபிப்பிராயத்தினை தோற்றுவிக்கும் வகையில் தங்களின் பதிவேடுகள், ஆவணங்கள் ஆகியவை சோதனையிடப்பட்ட போது எம்மால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### 1.0 நிலையான சொத்துக்கள்

லான்ட்மாஸ்டர், முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம் மற்றும் ஹன்டர் வாகனம் ஆகியவற்றின் உரிமம் ஆனது இன்னமும் கோவிலின் பெயருக்கு மாற்றப்படாமல் இருப்பது அறியக் கூடியதாக இருந்தது.

இவ்வருடம் கோவிலுக்குரிய இரண்டு படகுகளில் ஒன்று ரூ.813,000./- ற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 2.0 நிலையான வைப்புக்கள்

மேற்படி நிலையான வைப்புக்கள் தொடர்பாக வங்கி முகாமையாளர்களிடமிருந்து அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தும் கடிதங்களானது எம்மால் பார்வையிடப்பட்டு மீதிகள் சரியென அறியப்பட்டது.

### 3.0 நடைமுறை சொத்துக்கள்

#### 3.1 இருப்புக்கள்

எல்லா இருப்புக்கள் தொடர்பான பட்டியல்கள் மெய்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இவற்றில் காட்டப்பட்டுள்ள கணிய மீதிகள் தொடர்பாக 31.12.2011ல் பௌதீமாக இருப்புக்கள் செவ்வை பார்க்கப்படவில்லை என்பது அறியக்கூடியதாக உள்ளது.

## காணிக்கை நகைகள்

### காணிக்கை நகைகள் நாளந்தப் பதிவேடு (உட்களஞ்சியம்)

ப.சி.இல: 469ன் படி 30.09.2011ல் கிடைக்கப் பெற்ற 08 கிராம் நிறையுள்ள 01 சங்கிலியானது காணிக்கை நகைகள் நாளந்தப் பதிவேட்டில் பதியப்படவில்லை. இது தொடர்பான விசாரணை மேற்கொண்ட போது இச் சங்கிலியானது தவறிவிட்டது என அறியமுடிந்தது. எனினும் 11.10.2012 திகதி வரை இப் பற்றுச்சிட்டை தொடர்பாக முகாமையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### காணிக்கை நகைகள் இருப்பு

31.12.2011லுள்ள காணிக்கை நகைகள் இருப்புத் தொடர்பாக பொருளாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்புச் சான்றுப் பத்திரத்தின் பிரகாரம் மீதியானது, கணக்கு மீதியுடன் சரியாக இருந்தது. எனினும் இக் காணிக்கை நகைகள் 31.12.2011ல் பௌதீகமாக இருந்ததா என்பது சரிபார்க்கப்படவில்லை. இதே வேளை 06.05.2012ல் அறங்காவலர் சபையினரால் பௌதீகமாக இருப்பெடுக்கப்பட்ட மீதியானது, கணக்கு மீதியுடன் செவ்வை பார்க்கப்பட்ட போது வேறுபாடு காணப்பட்டது. இது தொடர்பான விசாரணை மேற்கொண்ட போது 05.03.2012ம் திகதி தொடக்கம் (ப.சி.இல:705 தொடக்கம்) 06.05.2012 திகதி வரை (ப.சி.இல:896 வரை) கிடைக்கப் பெற்ற 601 கிராம் 200 மி.கிராம் நிறையுள்ள பவுண்கள் கூட்டுப் பொறுப்பில் வைக்கப்படாமலும், பௌதீகமாக நிறுக்கப்படாமலும் களஞ்சியத்திலேயே இருந்ததாக அறிய முடிந்தது.

### ிற்பனைக்கான நகைகள் இருப்பு

1.12.2011ல் விற்பனைக்கென ஒதுக்கப்பட்ட நகைகளின் 417 கிராம் 151 மி.கிராம் றையுள்ள ரூ. 619,350/- பெறுமதியான நகைகள் தொடர்பான இருப்புக்களை றுதிப்படுத்தும் கடிதம் பொருளாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### ட்டுப் புடவைகள் இருப்பு

தற்கான இருப்பேடு பேணப்படாமல் வேலைத்தாள்களே இருப்பேட்டிற்குப் பதிலாகப் ணப்பட்டிருந்தது.

3.2 பெறவேண்டிய கணக்குகள்

கோவிலின் பெறவேண்டிய கணக்குகள் தொடர்பாக பல வருடங்களாக திருக.உருத்திரகுமாரன் அவர்களிடமிருந்து பெறவேண்டியிருந்த தொகையான ரூ.68,193/- ஆனது 27.09.2011 அன்று அவரினால் கோவிலுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

3.3 வங்கி மீதிகள் (சேமிப்புக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகள்)

தபாலகம், நயினாதீவு தவிர மற்றைய வங்கிகளின் முகாமையாளர்களிடமிருந்து அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தும் கடிதங்களானது எம்மால் பார்வையிடப்பட்டு மீதிகள் சரியென அறியப்பட்டது.

4.0 நிதி மூலங்கள்

4.1 பொது நிதி

இவ்வருடம் அடியார்களிடமிருந்து பெறப்பட்ட காணிக்கை நகைகள், பட்டுப் புடவைகள், நிலையான சொத்துக்கள் அத்துடன் காணிக்கை நகைகள் இருப்புக்களின் முன்னைய ஆண்டுப் பெறுமதி சீராக்கம், இவ்வருடம் பவுண் நிறையிடப்பட்ட போது மேலதிகம், விற்பனைக்கான பவுண்கள் பெறுமதியிடப்பட்ட போது மேலதிகம் மற்றும் விற்பனைக்கான பட்டுப் புடவைகளின் பெறுமதி வித்தியாசம் என்பவற்றின் மூலம் ரூ.117,047,821/- இனால் பொது நிதி அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், காணிக்கை நகைகள் இருப்புக் கணக்கிலிருந்து விற்பனைக்காக புடம் போடப்பட்ட போது ஏற்பட்ட சேதாரப் பெறுமதி மற்றும் கோவில் பாவனைக்கான (நவக்கிரகம்) பவுணின் பெறுமதி என்பவற்றினால் ரூ.402,000/- இனால் பொது நிதி குறைக்கப்பட்டிருந்தது.

4.2 திரண்ட நிதி

இவ்வருடம் செலவிலும் கூடிய வருமானமான ரூ.750,524/- இனால் திரண்ட நிதியானது அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுச் செம்மையாக்கல்களினால் ரூ.176,590/- இனால் திரண்ட நிதியானது குறைக்கப்பட்டிருந்தது.

4.3 திருப்பணி நிதி

மேற்படி நிதிக்கென இவ்வருடம் உண்டியல் வருமானம் ரூ.2,828,388/-, அடியார்கள் அன்பளிப்பு ரூ.30,021,869/-, மற்றும் கேள்வி கோரல்கள் வைப்புக்கள் (மீளளிக்காத வைப்புக் கட்டணம்) ரூ.45,980/- என்பவற்றின் மொத்தத் தொகையாக ரூ.32,896,238/- பெறப்பட்டிருந்தது. இதனால் திருப்பணி நிதி ஆரம்ப மீதியுடன் சேர்த்து ரூ.35,854,213/- ஆக அதிகரித்திருந்தது. எனினும் இந்நிதி தொடர்பான செலவுகளாக இராஜகோபுரம் அமைக்கும் வகையில் ரூ.22,839,941/- , கோவிலின் பல வகைப்பட்ட பொதுக் கட்டிடங்கள் புனரமைப்பு மற்றும் ஏனைய வேலைகள் வகையில் ரூ.14,671,142/- மற்றும் ஆலய உட்கட்டுமான வேலைகள் (புனருத்தாரணம்) வகையில் ரூ.46,859,865/- என்பவற்றின் மொத்தத் தொகையாக ரூ.84,370,948/- செலவுகள் ஏற்பட்டுள்ளது. எனவே இதை ஈடு செய்யும் வகையில் பொது நிதியிலிருந்து ரூ.50,000,000/- அறங்காவலர் சபைத் தீர்மானத்தின் படி மாற்றப்பட்டிருந்தது.

கோவிலின் இராஜ கோபுரத் திருப்பணி, கோவிலின் பல வகைப்பட்ட பொதுக் கட்டிடங்கள் புனரமைப்பு மற்றும் ஆலய உட்கட்டுமான வேலைகள் (புனருத்தாரணம்) போன்றன தொடர்பாக இவ்வருடம் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச்சிட்டைகளில், என்ன பெறுமதியான வேலைகள் முடிக்கப்பட்டது, இவைகள் தொடர்பான பிடிகாசு (Retention money) போக கொடுபடக் கூடிய மீதிகள் போன்ற விடயங்கள் எதுவும் கருத்திற் கொள்ளப்படாமலேயே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மேலும் கொடுப்பனவுகள் தொடர்பாக உறுதிச்சிட்டைகளில் அங்கீகாரம் பெற்ற பொறியியலாளரின் சிபார்சு எதுவும் பெறப்படவில்லை.

4.4 தினசரி அன்னதான நிதி

அடியார்களினால் தினசரி அன்னதானத்திற்கென இவ்வருடம் ரூ.10,488,866/- வழங்கப்பட்டிருந்ததுடன், இத் தேவைக்காக இந்நிதியிலிருந்து ரூ.3,000,000/- மாற்றப்பட்டுள்ளது.

4.5 அறக்கொடை நிதி

இவ்வருடம் செலவுகளாக ரூ.1,002,500/- ஏற்பட்டது போக மீதியாக ரூ.5,221,083/- உள்ளது.

## 5.0 நடைமுறைப் பொறுப்புக்கள்

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

**சென்மதியாளர்கள்**

31.12.2011ல் கோவிலின் முன்னாள் பொருளாளர் திரு க. ஜீவசீலனுக்கு கோவிலினால் ரூ.14,032/- செலுத்தப்பட வேண்டுமெனக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. இத் தொகையினை கோவிலுக்கு அன்பளிப்பாக வழங்குவதாக 11.10.2012ல் ஒரு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தார். இது தொடர்பான சீராக்கம் அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

## 6.0 வருமானக் கூற்று

**தேறிய வருமானம் (இலாபம் ரூ.750,524/-)**

இவ்வருடம் ரூ.750,524/- செலவிலும் கூடிய வருமானமாக அதாவது இலாபமாகக் கிடைத்துள்ளது.

6.1 அம்பாள் படங்கள் விற்பனையினால் இலாபம்

இவ்வருடம் அம்பாள் படங்கள் விற்பனை தொடர்பாக ரூ.322,104/- இலாபமாகக் கிடைக்கப் பெறப்பட்டிருந்த போதும், இத் தொகை சரியானது என்பதை எம்மால் உறுதி செய்ய முடியாதுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னுள்ள படங்கள் இறுதி இருப்புக் கணியங்களுடன் சேர்க்கப்பட்டு பெறுமதியிடப்பட்டிருந்ததாகக் கணக்காளரின் தகவல் தரப்பட்டிருந்த போதும், இவைகளில் முன்னைய ஆண்டுகளுக்குரிய கணியங்கள் மற்றும் பெறுமதி எவ்வளவு என்ற விபரங்கள் தரப்படவில்லை.
மேற்படி அவதானிப்பின் படி அம்பாள் படங்கள் விற்பனை தொடர்பான இலாப நட்டக் கணக்கில் கிடைக்கப் பெற்ற இலாபமானது சரியானது இல்லை என்பது எமது அபிப்பிராயமாகும்.

**6.2 அம்பாள் புத்தகங்கள் விற்பனையினால் இலாபம்**

இவ்வருடம் அம்பாள் புத்தகங்கள் விற்பனை தொடர்பாக ரூ.268,518/- இலாபமாகக் கிடைக்கப் பெறப்பட்டிருந்த போதும், இத் தொகை சரியானது என்பதை எம்மால் உறுதி செய்ய முடியாதுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னுள்ள புத்தகங்கள் இறுதி இருப்புக் கணியங்களுடன் சேர்க்கப்பட்டு பெறுமதியிடப்பட்டிருந்ததாகக் கணக்காளரின் தகவல் தரப்பட்டிருந்த போதும், இவைகளில் முன்னைய ஆண்டுகளுக்குரிய கணியங்கள் மற்றும் பெறுமதி எவ்வளவு என்ற விபரங்கள் தரப்படவில்லை.
மேற்படி அவதானிப்பின் படி அம்பாள் புத்தகங்கள் விற்பனை தொடர்பான இலாப நட்டக் கணக்கில் கிடைக்கப் பெற்ற இலாபமானது சரியானது இல்லை என்பது எமது அபிப்பிராயமாகும்.

**6.3 காப்பு நூல்கள் விற்பனையினால் இலாபம்**

இவ்வருடம் காப்பு நூல்கள் விற்பனை தொடர்பாக ரூ.2,376,540/- இலாபமாகக் கிடைக்கப் பெறப்பட்டிருந்தது. கடந்த வருட ஆண்டு இறுதியின் போது காப்பு நூல்களின் கையிருப்புப் பெறுமதி ரூ.34,067/- ஆக உறுதிப்படுத்தல் பத்திரம் தரப்பட்டிருந்த போதும் மீள் இருப்பு எடுத்ததின் பிரகாரம் ரூ.176,600/- பெறுமதியான காப்பு நூல்கள் இருந்ததாகக் காணப்பட்டு அதற்குரிய செம்மையாக்கல்கள் செய்யப்பட்டது.

**6.4 தினசரி அன்னதானச் செலவுகள்**

பெறப்பட்ட உண்டியல் வருமானம், அன்பளிப்புக்கள் ஆகிய வருமானத்திற்கு மேலதிகமாக, தினசரி அன்னதான நிதியிலிருந்தும் ரூ.3,000,000/- இத் தேவைக்காக மாற்றப்பட்டிருந்தது.

**6.5 இந்துசமய ஊக்குவிப்பு அன்பளிப்பு செலவுகள்**

இச்செலவானது ரூ.192,800/- பெறுமதியுள்ள கோவிலுக்குரிய 186 பட்டுப் புடவைகளானது பிற ஆலயங்களுக்கும் மற்றும் இன்னோரன்ன தேவைகளுக்காகவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டதென தகவல் தரப்பட்டிருந்த போதும் இவைகள் வழங்கியது தொடர்பாக உறுதிப்படுத்தும் போதிய ஆவணங்கள் எதுவும் எமக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

7.0 கொடுப்பனவுகள்

பொருட்கள் கொள்வனவு தொடர்பான கட்டுப்பாடுகள்

கேள்வி கோரல் (Quotation)

இராஜகோபுரத் திருப்பணி வேலை, ஆலய உட்கட்டுமான (புனருத்தாரணம்) வேலை, ஏனைய பொதுத் திருப்பணி வேலை போன்றவற்றிற்கு கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் தொடர்பாக, சில பொருட்களுக்கு கேள்வி கோரப்பட்டு வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டு பொருட்கள் பெறப்பட்டு இருந்தாலும், பல பெறுமதி மிக்க பொருட்கள் தொடர்பாக கேள்வி கோரல்கள் கோரப்படவில்லை.

8.0 எரிபொருட்கள் பாவனை

முச்சக்கரவண்டி, லான்ட்மாஸ்டர்கள், உழவு இயந்திரம், ஹன்டர் வாகனம் போன்றவற்றிற்கு களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்ட எரிபொருட்களின் பாவனை தொடர்பாக அதனது சரியான தன்மையினை அறியமுடியாமலிருந்தது. ஏனெனில் இவைகளுக்கான ஓட்ட அட்டவணைகள் (Running charts) மற்றும் நாளாந்தக் குறிப்பேடு ஆகியன இவ் ஆண்டு முழுமையாகப் பேணப்படவில்லை.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மேலதிக தகவல்கள், விளக்கங்கள் தேவைப்படுமிடத்து அவற்றை எம்மால் வழங்கக் கூடியதாக இருக்கும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி,

எம். இராஜநாயகம் அன்ட் கம்பனி
பட்டயக்கணக்காளர்கள்

திகதி: 2012ம் ஆண்டு ஐப்பசி. 11

...AVAGAM & CO
Chartered Accountants
JAFFNA

விவேகானந்தா அச்சகம்